**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 25.08.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரோசைய்யா | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | ராகவய்யா | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் ஜங்காளபள்ளி, பொதட்டுர் பேட்டை–ல் வசித்து வருகிறேன். நான் தற்போது கோவில் பூசாரியாக இருக்கிறேன். இறந்த சண்முகம் என்னுடைய மகன் ஆவார். அவர 02.02.2024ம் தேதியில் எங்கள் கோவில் குப்பாபிஷேகத்தில் கூட்டத்தில் கீழே விழந்துவிட்டார். அதன் பிறகு வீட்டிற்கு வந்துவிட்டார் 20 நாட்கள் கழித்து எங்களது கிராம்தில் உள்ள பஸ் ட்டான்டில் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். நாங்கள் திருத்தணி அரசு மருத்துவமனையில் சேரத்தோம். அவரகள் முடியாது என்று திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். பின்னிட்டு சென்னை அரசு பொது மருத்துவமனையில் சேரத்தோம். அங்கு இரண்டு அறுவை சிகிச்சை செய்தார்கள். சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். போலிசார் என்னிடம் கையெழுத்து போட சொன்னார்கள். போட்டேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. அது **அ.த.சா.ஆ.1** ஆகும். அதில் என்ன எழுதியது என்ற விபரம் தெரியாது. வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு

விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

31.1.2024 காலை 9 மணிக்கு எங்கள் ஊரில் விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது என்றும், என் மகன் கஜேந்திரன் சாமி தரிசனம் செய்யும்போது திருத்தணியைச் சேர்ந்த குருசாமியின் மகன் சண்முகம் என்பவர், சாமியை பார்க்கமுடியவில்லை, தள்ளிப்போடா என்று சண்டைபோட்டாரென்றும், அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த மோகனா, மல்லிகா ஆகியோர் ஏன் சத்தம் போடுகிறீர்கள் என்றும், அதேபோல் 5.2.2024 மாலை 6 மணிக்கு மகன் கஜேந்திரன் கோயில் பூஜையில் இருக்கும்போது முன்விரோதம் காரணமாக சண்முகம் அங்கு வந்து தகராறு செய்தாரென்றும், இதைக் கேள்விப்பட்டு என் இரண்டாவது மகன் சண்முகம் அவரிடம் சண்டை போட்டாரென்றும், அதற்கு குருசாமி மகன் சண்முகம் அங்கிருந்த வேலிக்காத்தான் கட்டையை எடுத்து எனது மகன் சண்முகத்தின் தலையில் ஓங்கி அடிததாரென்றும், சண்முகம் கீழே விழுந்தாரென்றும், அவரை காலால் எட்டி உதைதும், மார்பின்மீது எட்டி உதைத்தும், அங்கிருந்த மோகனாம்பாள், மல்லிகா, ஜெகதாம்மாள் அவர்களை மடக்கி அனுப்பிவைத்தனர் என்றும், அவருக்கு வெளிக் காயங்கள் எதுவும் இல்லாததால் நான் மருத்துவனை அழைத்துச் செல்லவில்லையென்றும், ஆனால் எனது மகன் அடிக்கடி தலைவலி வருவதாக சொல்லிவந்தான் என்றும், 27.2.2024 சுமார் காலை 8 மணிக்கு ஊர் பஸ் ஸ்டாப்பில் மயங்கி விழுத்துவிட்டதாக தகவல் கிடைத்து அவரை திருத்தணி அரசு மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றோம். அதன்பிறகு அரசு மருத்துவமனையில் பரிசோதித்த அவர்கள் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லுமாறு கூறியுள்ளார்கள் என்றும், அப்போது எனது மகள் புவனேஸ்வரி அங்கு வந்தார் என்றும், நடந்ததை அவரிடம் கூறினேன் என்றும், திருவள்ளூர் அரசு மருத்துவமயில் மருத்துவர்கள் தலையில் ரத்தம் கட்டியுள்ளது என்றும், சென்னை பொது மருத்துவனைக்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள் என்றும், 28.2.2024 மாலை 5.40 மணிக்கு சென்னை பொது மருத்துவனைக்கு அழைத்துச்சென்றோம் என்றும், மருத்துவர்கள் விசாரித்தபோது எனது

மகள் 5.2.2024ம் தேதி மாலை 6 மணிக்கு என் மகனை குருசாமி மகன் அடித்ததைக் கூறாமல் பதற்றத்தில் தேதி தெரியாமல் 26.2.2024ம் தேதி எங்கள் பஸ் ஸடாப்பில் குடித்துவிட்டு விழுந்துவிட்டார் என்று மாற்றி கூறிவிட்டேன் என்றும் 2.3.2024ல் நான் பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, உதவி ஆய்வாளர் விசாரித்து, என் மகனை தாக்கிய சண்முகத்தை அடையாளம் காட்டினேன் என்றும், இந்நிலையில் 6.3.2024ம் தேதி காலை 8.45 மணிக்கு எனது மகன் இறந்துவிட்டான் என்று பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தார் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.08.25 18:45:56 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 25.08.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரபாபு | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | கருப்பையா | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் ஜங்காளபள்ளியில் முன்னால் தலைவ்ர தற்போது ஒப்பந்த முறையில் வேலை செய்து வருகிறேன். நான் கோவில் குப்பாபிஷேகத்தில் இருந்தேன் அப்போது கூட்டத்தில் தகராறு நடந்ததாக சொன்னா்ரகள். மற்றப்படி வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதிகோரி அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசுத் தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

31.1.2024 காலை 9 மணிக்கு எங்கள் ஊரில் விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது என்றும், ரோசய்யா மகன் கஜேந்திரன் சாமி தரிசனம் செய்யும்போது திருத்தணியைச் சேர்ந்த குருசாமியின் மகன் சண்முகம் என்பவர், சாமியை பார்க்கமுடியவில்லை, தள்ளிப்போடா என்று சண்டைபோட்டாரென்றும், அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த மோகனா, மல்லிகா ஆகியோர் ஏன் சத்தம் போடுகிறீர்கள் என்றும், அதேபோல் 5.2.2024 மாலை 6 மணிக்கு மகன் கஜேந்திரன் கோயில் பூஜையில்

இருக்கும்போது முன்விரோதம் காரணமாக சண்முகம் அங்கு வந்து தகராறு செய்தாரென்றும், இதைக் கேள்விப்பட்டு ரோசையாவின் இரண்டாவது மகன் சண்முகம் அவரிடம் சண்டை போட்டாரென்றும், அதற்கு குருசாமி மகன் சண்முகம் அங்கிருந்த வேலிக்காத்தான் கட்டையை எடுத்து ரோசையாவின் மகன் சண்முகத்தின் தலையில் ஓங்கி அடிததாரென்றும், சண்முகம் கீழே விழுந்தாரென்றும், அவரை காலால் எட்டி உதைத்தும், மார்பின்மீது எட்டி உதைத்தும், அந்த நேரத்தில் நானும் அங்கிருந்த மோகனாம்பாள், மல்லிகா, ஜெகதாம்மாள் அவர்களை மடக்கி அனுப்பிவைத்தோம் என்றும், தகவல் தெரிந்து ரோசையா அங்கு வந்துவிட்டார், அப்போது குருசாமி மகன் சண்முகம் அவர்களை வேலிக்காத்தான் கட்டையை காண்பித்து, என்னிடம் வைத்துக்கொண்டால் உங்களை காலிசெய்வேன் என்று மிரட்டினார் என்றும், 27.2.2024 சுமார் காலை 8 மணிக்கு ஊர் பஸ் ஸ்டாப்பில் சண்முகம் மயங்கி விழுத்துவிட்டதாக தகவல் கிடைத்து அவரை திருத்தணி அரசு மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார்கள் என்றும், இது சம்பந்தமாக 2.3.2024ம் தேதி ரோசையா பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் குருசாமி மகன் சண்முகத்தின்மீது புகார் கொடுத்தது குறித்து கேள்விப்பட்டு இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரத்தார் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.08.25 18:46:04 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.